
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 72 | 4 Pages | 11.10.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 72 | 4 பக்கங்கள் | 11.10.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல**

**மற்றைய தேற்றா தவர்**

**விளக்கம்:**

**களவு செய்தலைத் தவிர மற்ற நல்லவழிகளைத் நம்பித்தெளியாதவர்அளவுஅல்லாதசெயல்களைச் செய்து அப்போதே கெட்டழிவர்.**

## 2024ம் ஆண்டின் வேதியியலுக்கான நோபல் பரிசு மூவருக்கு அறிவிப்பு




அமெரிக்கா, அக். 11

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான துறைகளில் சர்வதேச சமூகத்திற்கு சிறப்பான பங்களிப்பு செய்த சாதனையாளர்களுக்கான நோபல் பரிசு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன்படி 2024ம் ஆண்டிற்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. நேற்று முன்தினம் இரு அமெரிக்கர்களுக்கு மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. நேற்று இயற்பியலுக்கான நோபல் பரிசுக்கு 2 விஞ்ஞானிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

அந்த வரிசையில், வேதியியலுக்கான நோபல் பரிசு டேவிட் பேக்கர், டெமிஸ் ஹசாபிஸ் மற்றும் ஜான் ஜம்பர் ஆகியோருக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருக்கிறது. கணக்கீட்டு புரத வடிவமைப்பு மற்றும் புரதஅமைப்புகணிப்பு ஆகியவற்றுக்காக இந்த ஆண்டு மூவருக்கு நோபல் விருது வழங்கப்படுகிறது.

## டாய்லெட் பிரேக் போகாம இருந்தா போனஸ் மதிப்பெண்.. குழந்தைகளை பாடாய் படுத்திய கறார் கணக்கு டீச்சர்

அமெரிக்கா, அக். 11

அமெரிக்காவில் சேர்ந்த கணக்கு ஆசிரியை மாணவர்கள் கழிவறை செல்ல இடைவேளை எடுத்துக்கொள்ளாமல் இருக்க போனஸ் மதிப்பெண்கள் வழங்கி ஊக்குவித்த சம்பவம் கண்டனத்தைக் குவித்து வருகிறது. கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள பள்ளி ஒன்றில் நடந்த இந்த கொடுமை குறித்து அங்கு பயின்று வந்த சிறுமியின் தாய் சமூக வளைத்தில் பதிவிட்டதை அடுத்து இந்த விவகாரம் வைரலாகி வருகிறது.

மதிப்பெண்களைத் தேடி ஓடும் ரேசாக இந்தியா உட்பட உலகம் முழுமைக்கும் கல்வியானது தரம் தாழ்ந்து கிடக்கிறது. அந்த வகையில் சிறுவர்கள் மதிப்பெண்களே முக்கியம் என்று மூளைச்சலவை செய்யப்பட்டதால் அந்தமதிப்பெண்களுக்காக அவர்கள் தங்களின் இயற்கை உபாதையையும் அடக்கிக்கொள்ளும் அவலம் நிகழ்ந்துள்ளது.

'எனது மகளின் கணக்கு ஆசிரியை ஒரு வினோதமான டாய்லட் பாலிசி வைத்திருக்கிறார். அதன்படி வாரத்துக்கு ஒரு நாள் மட்டுமே பள்ளியில் குழந்தைகளை பாத்ரூம் போக அவர் அனுமதிக்கிறார், அதன்படி பாத்ரூம் போகாமல் வகுப்பறையிலேயே இருந்து பாடத்தைக் கவனிக்கும் குழந்தைகளுக்கு அவர்அகாடெமிக் பாயிண்ட்ஸ் எனப்படும் குழந்தைகள் படிக்கும் தரத்தை நிர்ணயிக்கும் மதிப்பெண்களை போனசாக வழங்குகிறார்' என்று தனது சமுக வலைத்தள பதிவில் சிறுமியின் தாய் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இதுகுறித்து பிரின்சிபலுக்கு புகார் தெரிவித்து மெயில் அனுப்பியதற்கு தனது மகள் தன்னிடம் கோபித்துக்கொள்ளும் அளவுக்கு அவ்விஷயம் நார்மலைஸ் ஆக்கப்பட்டுள்ளதாக அவர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

பிரைவசி கருதி தனது மகளின் வயதையும் பள்ளி பெயரையும் அவர் குறிப்பிடவில்லை. இந்நிலையில் இந்த விவகாரம் சமூக வலைத்தளங்களில் விவாதப்பொருளாக மாறியுள்ளது.

## சீயர்ஸ்! லேட் நைட் ஷோவில் பீர் குடித்து CHILL செய்த கமலா ஹாரிஸ்.. கருத்துக்கணிப்பால் குஷி வீடியோ



அமெரிக்கா, அக். 11

அமெரிக்காவுக்கான அடுத்த அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் வரும் நவம்பர் 5 ஆம் தேதி நடைபெற உள்ளது. இதில் ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் அதிபர் வேட்பாளராக தற்போதைய துணை அதிபர் கமலா ஹாரிஸ் களமிறக்கப்பட்டுள்ளார். வயது மூப்பு காரணமாக அதிபர் ஜோ பைடன் தடுமாற்றத்தில் இருப்பது விமர்சிக்கப்பட்ட நிலையில் அவர் போட்டியிலிருந்து விலகி கமலாவை வேட்பாளராக அறிவித்தார்.

இந்திய ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த கமலாவுக்கு அமெரிக்காவில் தற்போதைய நிலவரப்படி எதிர் வேட்பாளர் டிரம்பை விட ஆதரவு சற்று அதிகமாவே உள்ளதாக கருத்துக்கணிப்புகள் கூறுகிறன. சியானா கல்லூரி மற்றும் தி நியூயார்க் டைம்ஸ் நடத்திய தேசிய கருத்துக்கணிப்பில் ஹாரிஸ் 49 சதவீதம் முதல் 46 சதவீதம் வரை ஆதரவு பெற்று டிரம்பை விட முன்னிலையில் உள்ளார்.

சமீபத்தில் நடந்த நேருக்கு நேர் விவாதத்தில் டிரம்ப்பை திறம்பட சமாளித்ததது கமலாவின் தலைமைப் பண்பு மீது அனைவரையும் நம்பிக்கை கொள்ளச் செய்தது. தற்போது தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் கமலா, லேட் நைட் ஊடக நேர்காணலில் பங்கேற்று ஜாலியாக பலதரப்பட்ட விஷயங்கள் குறித்து தொகுப்பாளர் ஸ்டெப்பான் கால்பெர்ட்டுடன் விவாதித்துள்ளார். அந்த நிகழ்ச்சியில் போது மில்லர் ஹை லைப் என்ற பீர் பானம் கமலாவுக்கு வழங்கப்பட்டது. கடைசியாக பேஸ் பால் போட்டியின் பொது குடித்தது என கூறியவரே அந்த டின் கேன் பாட்டிலைக் கையில் எடுத்த கமலா லாவகாக உடைத்து சீர்ஸ் சொல்லி குடிக்கும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

# ஆங்கிலேயரை எதிர்த்து போரிட்ட வெண்ணி காலாடி குயிலி சிலை: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்




சென்னை, அக். 11

தமிழக அரசு வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:

முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல், விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்தும், சொத்து சுகங்களை இழந்தும், தியாகங்கள் புரிந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் போற்றிப் பெருமைப்படுத்திடும் வகையில், காந்தி மண்டபத்தில் வ.உ.சி. சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம் பொலி வூட்டப்பட்டு அங்கு அவரது மார்பளவு சிலை, வீர பாண்டிய கட்ட பொம்மன் அவர்களுக்கு திருவுருவச் சிலை, மருது சகோதரர்களுக்குதிருவுருவச்சிலை, கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்காவில் வ.உ. சிதம்பரனார் முழு உருவச் சிலை, மூவலூர் ராமாமிர்தம் அம்மையாருக்கு திருவுருவச் சிலை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையாருக்குதிருவுருவச்சிலை, என பல்வேறு தியாக சீலர்களுக்கு சிலைகளை நிறுவி, மணி மண்டபங்கள் அமைத்து அவர்களின் புகழ்போற்றி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இன்று "தானம் என்றால் கேள் தருகிறேன். வரி யென்றால் ஒருநெல்மணி கூட கட்டமாட்டேன்" என்று முழங்கி நெல்கட்டான் செவல் எனப்பேர் படைத்த பூலித்தேவனின் முக்கிய தளபதியாகத் திகழ்ந்து வெள்ளையரை வென்றழித்து பூலித்தேவன் மடியில் உயிர்நீத்த மாவீரன் வெண்ணி காலாடியின் தியாக வீரத்தைப் போற்றிடும் வகையில், 2023 24ம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத்துறை மானியக் கோரிக்கையில், சுதந்திரப் போராட்ட வீரர் வெண்ணி காலாடியின் நினைவைப் போற்றும் வகையில் தென்காசி மாவட்டத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தென்காசி மாவட்டம், நெல்கட்டும் செவல் கிராமம், பச்சேரியில் வெண்ணி காலாடிக்கு 50 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள திருவுருவச்சிலையைமுதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

சிவகங்கை மன்னர் முத்து வடுக நாதரைக் கொன்று வஞ்சகத்தால் சிவகங்கையை கைப்பற்றிய, வெள்ளையரை வென்று சிவகங்கையை மீட்டிடச் சூளுரைத்துத் திண்டுக்கல் விருப்பாட்சி கோபால் நாயக்கரிடம் உதவிகேட்டுத் தஞ்சமடைந்தார் அவருடைய மனைவி வேலுநாச்சியார்.

அவர் தம்முடைய படைத் தளபதியாக விளங்கிய வீரத்தாய் குயிலி, மருது பாண்டியர்களுடன், திப்புசுல்தான் உதவியோடு சிவகங்கையை மீட்டிடப் படைதிரட்டி, வழியில் எதிர்ப்பட்ட பகைவர்களை எல்லாம் வென்றழித்து சிவகங்கையில் முகாமிட்டிருந்த வெள்ளையரைத் தாக்கினார்.

வீராங்கனை வேலுநாச்சியாரின் மெய்க்காப்பாளராக விளங்கிய குயிலி மெய் முழுதும் எரியெண்ணெயைத் தடவிக் கொண்டு வெள்ளையரின் ஆயுதக் கிடங்கில் குதித்து அழித்துத் தியாகச் சுடராகி சிவகங்கை வெற்றிக்கு வழிவகுத்தார்.

2023, 24ம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், சுதந்திரப் போராட்ட வீராங்கனை குயிலிக்கு சிவகங்கையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, சிவகங்கை வட்டம், ராகினிப்பட்டியில் அமைந்துள்ள வேலுநாச்சியார்மணிமண்டபவளாகத்தில் குயிலித்தாய்க்கு 50 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் வீரத்தை போற்றி 2 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள எத்தலப்பர் நாயக்கர் திருவுருவச் சிலையையும், தளி பேரூராட்சி, திருமூர்த்தி நகரில் அமைக்கப்பட்டுள்ள எத்தலப்பர் நாயக்கர் நினைவு அரங்கத்தையும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர்நா. முருகானந்தனம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர்வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மருத்துவர்வைத்தி நாதன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் கூறிப்பட்டு உள்ளது.

# புதுச்சேரி மாநில மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் உள்ளாட்சி தேர்தலை நடத்த வலியுறுத்தி பாகூரில் ஐந்தாம் கட்ட போராட்டம்



புதுச்சேரி, அக். 11

சிறப்புரைகழகத்தலைவர்பேராசிரியர் மு.ராமதாஸ், எழுச்சி உரை சேர்மன் RL வெங்கட்டராமன். புதுச்சேரி மாநிலத்தில் உள்ளாட்சி தேர்தலை நடத்தாத மத்திய மாநில அரசை கண்டித்தும் , உள்ளாட்சி தேர்தலை உடனடியாக நடத்த வலியுறுத்தியும், தொடர் போராட்டங்களை மக்கள் முன்னேற்ற கழகம் நடத்திக் கொண்டு வருகிறது.

இதுவரை நான்கு கட்டங்களாக உழவர்களை, அரியாங்குப்பம், நெட்டப்பாக்கம், வில்லியனூர் ஆகிய பகுதிகளில் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக ஐந்தாம் கட்டமாக ஓர் எழுச்சிப் போராட்டம் பாகூரில் 8.10.2024 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு பாகூர் சிவன் கோயில் அருகில் நடைபெற்றது. போராட்டத்திற்கு முன்பாக கழகத்தின் சேர்மன் RLV முன்னிலையில் கழகத்தின் தலைவர் மு. ராமதாஸ் அவர்கள் கழகத்தின் கொடியை ஏற்றி வைத்து அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

இப்போராட்டத்திற்கு மாநில இணை செயலாளர் GD இளங்கோவன் தலைமை தாங்கினார். மாநில உதவி செயலாளர் இதயவேந்தன் இணைப்புறை ஆற்றினார். முன்னாள் வார்டு உறுப்பினர் S.தனஞ்ஜெயன்மா நில செயலாளர் பரந்தாமன் , துணை செயலாளர் கலியபெருமாள், அணி செயலாளர் ரஞ்சித்குமார் ஆகியோர் முன்னிலைவகித்தனர். போராட்ட களத்திற்கு வந்திருந்த அனைவரையும் அணி தலைவர் GC சந்திரன் வரவேற்றார்.

மாநில பொதுச்செயலாளர் எ.மு.ராஜன் நோக்க உரை ஆற்றினார். முன்னாள் பஞ்சாயத்து தலைவர் ஜெகநாதன் கருத்துரை ஆற்றினார். கழகத்தின் சேர்மன் R L வெங்கட்டராமன் எழுச்சி உரை ஆற்றினார். அப்போது புதுவையில் உள்ளாட்சி தேர்தல் நடத்தாததை கண்டித்து மக்கள் முன்னேற்றகழகம்தொடர்போராட்டம் அறிவித்து நடத்துவதை பார்த்து தான், இதுவரை வாய் மூடி மௌனியாக இருந்த எதிர் கட்சிகள் உள்ளாட்சி தேர்தலை பற்றி பேச ஆரம்பித்துள்ளன. இதற்கு மேலும் புதுச்சேரி அரசு அலட்சியமாக இருந்தால் சட்டரீதியான நடவடிக்கை எடுப்போம் என்று எழுச்சி உரை ஆற்றினார். கழகத்தின் தலைவர் பேராசிரியர் மு.ராமதாஸ் அவர்கள் போராட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். அப்போது பேசுகையில் எல்லா விஷயத்திலும் தமிழகத்தை பின்பற்றி நடக்கும் புதுச்சேரி , உள்ளாட்சி தேர்தல் தேதி தமிழகத்தில் அறிவிக்க தயாராகி விட்டார்கள். புதுச்சேரியின் நிலை என்ன ? இனிமேலாவது புதுவை அரசு உள்ளாட்சி தேர்தல் நடத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசுக்கு.அழுத்தம் கொடுத்து சிறப்புரையாற்றினார்.

போராட்டத்தில் நித்தியானந்தன், ரவிகுமார், ராதாகிருஷ்ணன், விமலா பெரியாண்டி, காளாபட்டு குமார், நாகமுத்து, விஜயகுமார்,சரவணன், வக்கீல் கார்த்திகேயன்,கோமதி, கௌரி, சுலோச்சனா ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியாக மாநில உதவி செயலாளர் ஆண்டாள் போராட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

போராட்டத்தில் அணித்தலைவர்கள் , கழக உறுப்பினர்கள், மற்றும் ஊர் மக்கள் பெரும் திரளாகக் கலந்து கொண்டு போராட்டத்தை சிறப்பித்தனர்.

# டிஜிட்டல் சவுத் ட்ரஸ்ட் சார்பில் திருப்பூர் கோவை மாவட்டங்களில் ஆலோசனைக் கூட்டம்




திருப்பூர், அக். 11


டிஜிட்டல் சவுத் ட்ரஸ்ட் சார்பில் திருப்பூர் கோவை மாவட்டங்களில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் மக்களுக்கு செய்யக்கூடிய சேவைக்கான முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சுதாகர லட்சுமண ராஜன் டிஜிட்டல் சவுத் ட்ரஸ்ட் நிறுவனர் அவர்கள் விஜயகுமார் டிஜிட்டல் சவுத் டிரஸ்ட் தமிழ்நாடு தலைமைச் செயலாளர் பூங்கொடி ராஜன் முதன்மை தலைமை அலுவலர் கொங்கு மண்டலம் டிஜிட்டல் சவுத் டிரஸ்ட் பாலசுப்பிரமணியம் திருப்பூர் மாவட்ட தலைவர் கோபிநாத் திருப்பூர் மாவட்ட துணைத் திருமாரிசாமி ஸ்ரீதர் ஈரோடு மாவட்ட தலைவர் ரூபேஷ் கோவை மாவட்ட தலைவர் கொங்கு மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு மாநிலத் தலைவர் திரு. எஸ்.ஜி. கேசவ் மற்றும் தலைமை செயல் அதிகாரி திரு. எஸ். ஸ்ரீனிவாசன் ஆகியோரின் தலைமையின் டிஜிட்டல் சவுத்டிரஸ்ட் சென்னை காஞ்சிபுரம் வேலூர் கோவை திருப்பூர் ஈரோடு பல்வேறு மாவட்டங்களில் நலத்திட்டங்கள் உதவி செய்து வருகின்ற நிலையில் தற்போது திருவள்ளுவர் மாவட்ட தலைவர் குமரேசன் தலைமையில் கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் ஏழை எளியவர்களுக்கு கண் சிகிச்சை மற்றும் பாதிப்படைந்தவர்களுக்கும் டிஜிட்டல் சவுத் மூலியமாக கண் கண்ணாடிகள் கொடுக்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் டிஜிட்டல் சவுத டிரஸ்ட் உறுப்பினர்கள் பிரபாகரன் கேசதீஷ்குமார் லாகக்குமார் மற்றும் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்

தினகனி 11.10.2024

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைந்தது



பென்னாகரம், அக். 11

தமிழககர்நாடகா காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

இதனால் நேற்று ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது.

இந்த நிலையில் காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழை குறைந்தது. இதனால் இன்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 7 ஆயிரம் கனஅடியாக தண்ணீர் குறைந்து வந்தது.

மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

இதனால் சுற்றுலா பயணிகள் மெயின் அருவியில் ஆனந்தமாக குளித்து மகிழ்ந்தனர். மேலும் அவர்கள் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்து பார்த்தனர்.

காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு



சென்னை, அக். 11

லட்சத்தீவு மற்றும் அதனை யொட்டிய தென்கிழக்குப் அரபிக்கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் இது அடுத்த 2 நாட்களில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாக வாய்ப்பு இருப்பதால் குறிப்பாக தமிழகம், லட்சத்தீவு மற்றும் அரபிக்கடல் போன்ற பகுதிகளில் மழைக்கு வாய்ப்பு உள்ளது.

தமிழ்நாட்டில்10மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, திருப்பூர், தஞ்சாவூர், கோவை, ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் கன மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும்,

மேலும் 5 மாவட்டங்களுக்கு 12ந்தேதி ஆரஞ்சு அலர்ட் விடுத்திருக்கிறது. நெல்லை, குமரி, தூத்துக்குடி, ராமநாதபுரம், தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கு 12ந்தேதி கனமழை முதல் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொருத்தவரை வானம் மேமூட்டத்துடன் காணப்படும், பரவலாக மழைக்கு வாய்ப்பு.

13ந்தேதி தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, அரியலூர், பெரம்பலூர், ஆகிய 6 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

# சங்கிகளின் அழுக்கேறிய மூளையை சுத்தம் செய்ய முடியாது.., கால்களாவது சுத்தமாகட்டும்! உதயநிதி ஸ்டாலின்



சென்னை, அக். 11

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

என்னை இழிவு செய்வதாக நினைத்து தங்களின் அரசியல் முதிர்ச்சி இவ்வளவு தான் என்று அம்பலப்பட்டு நிற்கும் சங்கிகளைப் பார்த்து எனக்குப் பரிதாபம் மட்டுமே வருகிறது!

கொள்கை எதிரிகளுக்கு நம் மீது இவ்வளவு ஆத்திரம் வருகிறது என்றால், திராவிடக் கொள்கையினை நான் எந்தளவுக்குச் சரியாக பின்பற்றுகிறேன் என்பதற்கான சான்றிதழாகவே இதனைப் பார்க்கிறேன்.

தந்தை பெரியார் மீது செருப்புகளை வீசினர். அண்ணல் அம்பேத்கரை எவ்வளவோ அவமதித்தார்கள். பேரறிஞர் அண்ணாவை வசைபாடி மகிழ்ந்தனர். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மீது ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் தொடுத்தனர். நம் கழகத் தலைவர் மீது வீசப்படாத கடுஞ்சொற்கள் இல்லை.

அனைவரும் சமம் என்கிற நமது கொள்கை அவர்களுக்கு எரிச்சலூட்டுகிறது. பிறப்பாலும் மதத்தாலும் பிரித்தாளும் கொள்கையைப் பேசி மக்களை வெல்ல முடியாத அவர்களின் விரக்தி தான் நம்முடைய வெற்றி.

என் புகைப்படத்தை அவர்கள் காலால் இன்னும் நன்கு மிதிக்கட்டும். அவர்களின் அழுக்கேறிய மூளையை நம்மால் சுத்தம் செய்ய முடியாது. அவர்களின் கால்களாவது சுத்தமாகட்டும். கழக உடன்பிறப்புகள் இதைக்கண்டு கோபமுற வேண்டாம். இதற்கு எதிர்வினையாற்றுவதை – உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்த்து, தந்தை பெரியார் அண்ணல் அம்பேத்கர் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் கழகத்தலைவர் அவர்கள் வழியில் பகுத்தறிவு சமத்துவப் பாதையில் என்றும் அயராது நடைபோடுவோம்!

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

# பந்தல் அகற்றப்பட்ட போதிலும் தொடர்ந்து போராட்டம் நடத்தி வரும் சாம்சங் தொழிலாளர்கள்: போலீசார் குவிப்பு



காஞ்சிபுரம், அக். 11

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் அருகில் செயல்படும் சாம்சங் தொழிற்சாலையில் பணியாற்றி வரும் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, 8 மணி நேர வேலை, தொழிற்சங்க உரிமை உள்ளிட்ட 8 கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் மேற்கொண்டு வந்த நிலையில், தமிழக அமைச்சர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுகளில் சாம்சங் நிறுவனத்திற்கும், தொழிலாளர்களில் ஒரு பிரிவினருக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களில் இன்னொரு பிரிவினர் வேலை நிறுத்தத்தை தொடரப்போவதாக அறிவித்துள்ளனர்.

தொடர்ந்து ஊழியர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். நேற்றிரவு திடீரென போலீசார் போராட்டம் நடைபெற்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த பந்தலை அகற்றினர்.

அத்துடன் வீடு வீடாக சென்று போராட்டத்தில் ஈடுபட்ட முக்கியமான நபர்களை கைது செய்ததாக கம்யூனிஸ்ட் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இந்த நிலையில் இன்று காலையும் தொழிலாளர்கள் பந்தல் அமைக்கப்பட்டிருந்த இடத்திற்கு வந்தனர். பந்தல் அகற்றப்பட்ட நிலையிலும் அதே இடத்தில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அந்த போலீசார் அவர்களை கலைந்து செல்லுமாறு வலியுறுத்தினர். அந்த இடத்தில் போலீசார் அதிக அளவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

இத்தனை நாள் இல்லாமல், தற்போது கலைந்து போகச் சொல்வது ஏன் என தொழிலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதனால் அப்பகுதியில் பதற்றமான நிலை உருவாகியுள்ளது.

# போராட்டத்தில் ஈடுபட்டு வந்த சாம்சங் தொழிலாளர்கள் நள்ளிரவில் வீடு புகுந்து கைது




விழுப்புரம், அக். 11

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் அருகே சுங்குவார்சத்திரம் சிப்காட்டில் அமைந்துள்ள 'சாம்சங்' நிறுவனத்தில் தொழிலாளர்கள் 1,200 பேர் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் அமைப்பது உள்பட 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த மாதம் 9ந்தேதி முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை சுங்குவார்சத்திரத்தில் 'சாம்சங்' நிறுவன அதிகாரிகள், தொழிலாளர்கள்இடையேநடைபெற்றபேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. அதனைத்தொடர்ந்து, அன்று மாலை சென்னை தலைமைச்செயலகத்தில் இரு தரப்பினரையும் அழைத்து அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், டி.ஆர்.பி.ராஜா, சி.வி.கணேசன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆனால், நேற்று காலை போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் யாரும் பணிக்கு திரும்பவில்லை. தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த, சாம்சங் தொழிலாளர்களின் வீடுகளு க்கு நள்ளிரவில் சென்ற போலீசார், 10க்கும் மேற்பட்டோரை கைது செய்துள்ளனர். மேலும் போராட்டத் திடல்களில் இருந்த பந்தல்களையும் பிரித்துள்ள னர். செல்வப்பெருந்தகை, முத்தரசன், பாலகிருஷ்ணன், வேல்முருகன் என அனைத்து கட்சித் தலைவர்களும் போராடும் தொழிலாளர்களை நேரடியாக சந்திக்க இருந்த நிலையில், காவல்துறை இந்த நகர்வை முன்னெடுத்துள்ளது குறிப்பிடத்த க்கது. இதனிடையே, சாம்சங் தொழிலாளர்களை நள்ளிரவில் வீடு புகுந்து போலீசார் கைது செய்ததற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

# மாணவர்கள் போராட்டம் எதிரொலி... சென்னை மாநில கல்லூரிக்கு விடுமுறை அறிவிப்பு



சென்னை, அக். 11

சென்னையில் சில நாட்களுக்கு முன்பு ரூட் தல விவகாரம் தொடர்பாக மாணவர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டது. இதில் மாநிலகல்லூரியை சேர்ந்த மாணவர் சுந்தர் மீத தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் பலத்த காயமடைந்த சுந்தர் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இச்சம்பவம் தொடர்பாக பச்சையப்பன் கல்லூரியை சேர்ந்த 5 பேரை போலீசார் கைது செய்தனர்.

இதனிடையே ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மாணவர் சுந்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனால் சுந்தர் தாக்கப்பட்ட வழக்கு கொலை வழக்காக மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மாணவர் சுந்தர் உயிரிழந்த சம்பவத்தை அறிந்து சென்னை மாநில கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து செல்ல மறுத்து தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாணவர்களின்போராட்டம் காரணமாக சென்னை மாநில கல்லூரிக்கு இன்று முதல் ஞாயிற்றுக்கிழமை வரை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, உயிரிழந்த மாணவர் சுந்தருக்கு ஆசிரியர்கள், மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் மௌன அஞ்சலி செலுத்தினர்.

# சாம்சங் தொழிற்சங்க நிர்வாகிகள் 10 பேரை கைது செய்வதா? அன்புமணி ராமதாஸ் கண்டனம்



சென்னை, அக். 11

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார் சத்திரத்தில் தொழிற்சங்க அங்கீகாரம், 8 மணி நேர வேலை, ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சாம்சங் நிறுவனத் தொழிலாளர்கள் கடந்த சில வாரங்களாக வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தி வரும் நிலையில், அவர்களின்போராட்டபந்தலை காஞ்சிபுரம் மாவட்ட வருவாய்த்துறையினர் நேற்று இரவோடு, இரவாக அகற்றி உள்ளனர்.

அது மட்டுமின்றி, போராட்டத்தை முன்னெடுத்த தொழிற்சங்க நிர்வாகிகள் 10 பேரை கைது செய்து சட்டவிரோதக் காவலில் அடைத்து வைத்துள்ளனர். தமிழக அரசின் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது.

தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பது தான் தங்களின் முதன்மை நோக்கம் என்று கூறி வந்த தமிழக அரசு, இப்போது அப்பட்டமாக சாம்சங் நிறுவனத்தின் கையாளாக மாறி தொழிலாளர்கள் மீது அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டு வருகிறது.

தொழிலாளர்களின் கோரிக்கை குறித்து இரு தரப்பினரையும் அழைத்துப் பேசிய தமிழக அரசு, அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை கண்டிருக்க வேண்டும். ஆனால், ஒரு பொம்மை தொழிற்சங்கத்தை உருவாக்கி சாம்சங் நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடச் செய்த அரசு, அதற்கு உடன்படாத தொழிலாளர்களை மிரட்டிப் பணிய வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

அதன்ஒருகட்டமாகவே கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திராவிட மாடல் அரசு என்பது எப்போதும் முதலாளிகளுக்கான அரசு தான் என்பதும், தொழிலாளிகளின் நலன் குறித்து அது ஒருபோதும் கவலைப்படாது என்பதும் மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டு உள்ளது. கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். தமிழக அரசின் இந்த அடக்குமுறையையும், துரோகத்தையும் தொழிலாளர் சமுதாயம் ஒருபோதும் மன்னிக்காது. மக்கள் விரோத அரசுக்கு தொழிலாளர்கள் மறக்க முடியாத பாடத்தை புகட்டுவார்கள் என்பது உறுதி.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சாம்சங் தொழிலாளர்கள் நள்ளிரவில் கைது செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது: எடப்பாடி பழனிசாமி



சென்னை, அக். 11

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள சாம்சங் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளர்நிறுவனம் அரசு முத்தரப்பு பேச்சுவார்த்தையில் முழுமையான தீர்வு எட்டப்படாத நிலையில், அரசு தரப்பில் பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக செய்திகள் வழங்கப்பட, தொழிலாளர்கள் அதனை முற்றிலுமாக மறுத்து போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று காலை பேருந்துகளில் ஏறி, காவல்துறையினர் சாம்சங் தொழிலாளர்கள் இருக்கிறார்களா என்று சோதனையிட்டதாகவும், நள்ளிரவில் வீடு புகுந்து கைது செய்திருப்பதாகவும் வரும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு குறித்து நான் நாள்விடாது சுட்டிக்காட்டி வருகிறேன். அத்தகு குற்றங்களைச் செய்தவர்களை பிடிப்பதில் விடியா திமுக அரசு காட்டாத முனைப்பை, நியாயமான கோரிக்கைகளுக்காக போராடும் தொழிலாளர்களை ஒடுக்குவதில் காட்டுவது ஏன்?


போராட்டங்களை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைக்க திராணியின்றி, அடக்குமுறையால் ஒடுக்க முயலும் விடியா திமுக அரசுக்கு எனது கடும் கண்டனம்.

உழைப்பாளர் தினத்தன்று மட்டும் சிகப்பு சட்டை போட்டு கொண்டு, "நானும் தொழிலாளி" என்று மேடையில் மட்டும் முழங்கும் மு.க.ஸ்டாலினுக்கு சிகப்பு சட்டை மீது உண்மையிலேயே மதிப்பிருக்குமாயின்,

இதுபோன்ற ஜனநாயக விரோத, தொழிலாளர் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதை விடுத்து, கைது செய்யப்பட்ட தொழிலாளர்களை உடனடியாக விடுவிப்பதுடன், தமிழக அரசு மீண்டும் தலையிட்டு, தொழிலாளர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, உரிய பேச்சுவார்த்தை மூலம் இந்த பிரச்சனையை சுமூகமாக தீர்க்குமாறு வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர்கூறியுள்ளார்.

# சாம்சங் தொழிலாளர்கள் கைது: உயர்நீதிமன்றத்தில் அவசர முறையீடு



ஸ்ரீபெரும்புதூர், அக். 11

ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள சுங்குவார் சத்திரத்தில் 'சாம்சங் இந்தியா' நிறுவனம் இயங்கி வருகிறது. இங்கு பிரிட்ஜ், டி.வி., வாஷிங்மெஷின் உள்ளிட்ட வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிக்கின்றனர்.

இங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்தை தொடங்கஅனுமதிகேட்டு வருகின்றனர். அது மட்டுமின்றி சம்பள உயர்வு, சம்பள ஏற்றத்தாழ்வு களைதல் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கையை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழக அமைச்சர்கள் நடத்திய பேச்சுவார்த்தையில் தொழிலாளர்களில் ஒரு பிரிவினருக்கும் சாம்சங் நிறுவனத்திற்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் ஒரு பிரிவினருடன் உடன்பாடு ஏற்படவில்லை. இதனால் அவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில்தான் நேற்றிரவு போலீசார் போராட்ட பந்தலை அகற்றினர். இன்று காலை போராட்டத்திற்கு கலந்து கொண்ட தொழிலாளர்களை கலைந்த செல்ல வற்புறுத்தினர். அத்துடன் அவர்கள் இழுத்து கைது செய்ய முயற்சித்தனர். ஏற்கனவே முக்கிய நிர்வாகிகளை போலீசார் நேற்றிரவு கைது செய்துள்ளனர்.

இந்த நிலையில் தொழிலாளர்களை வலுக்கட்டாயமாக கைது செய்து போலீசார் முயற்சி செய்வதற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் அவசர முறையீடு செய்யப்பட்டுள்ளது. சி.ஐ.டி.யு தொழிற்சங்கம் சார்பில் வழக்கறிஞர் திருமூர்த்தி ஆஜராகி அவசர ஆட்கொணர்வு வழக்காக விசாரிக்க வலியுறுதியுள்ளார். பிற்பகலில் விசாரிப்பதாக நீதிபதிகள் பாலாஜி மற்றும் வேல்முருகன் அமர்வு தெரிவித்துள்ளது.

## விழிப்புணர்வு வாசகத்தில் எழுத்துப் பிழை: முதலமைச்சருக்கு கடிதம் எழுதிய சிறுமி




கோவை, அக். 11

கோவை பீளமேடு அடுத்த காந்திமாநகர் ஹட்கோ காலனியை சேர்ந்தவர் பழனிச்சாமி. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கணக்கு உதவியாளராக வேலைபார்த்து வருகிறார்.

இவரது மனைவி கிருத்திகா. இந்த தம்பதிக்கு பிரணவிகா (வயது10). இவர் அந்த பகுதியில் உள்ளதனியார்பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வருகிறார்.

இந்த நிலையில் கடந்த 6ந்தேதி பழனிச்சாமி தனது குடும்பத்தினருடன் கோவையில் உள்ள பிரபல மால் ஒன்றில் உள்ள படம் பார்க்கச் சென்றார்.

தியேட்டரில் படம் தொடங்குவதற்கு முன்பு போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக விழிப்புணர்வு வாசகம் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

அதில், "புகைப்பிடித்தால் புற்றுநோய் உருவாகும் மற்றும் உயிரைக் கொள்ளும் என்ற வாசகம் வந்தது.

அதை பார்த்த சிறுமிக்கு கொல்லும் என்பதற்கு பதிலாக கொள்ளும் என தவறாக இருப்பதாக சிறுமி தனது தந்தையிடம் கூறி கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் அந்த வாசகம் எழுத்துப் பிழையுடன் வருவதால் இதனை பார்க்கும் பல லட்சம் மக்களும், குழந்தைகளும் எழுத்துப் பிழையுடனே அதனை எழுத வாய்ப்புள்ளதாக கருதிய சிறுமி, தனது தந்தையுடன் சென்று திரையரங்கு மேலாளரிடம் இதுகுறித்துமுறையிட்டுள்ளார்.

அதற்கு அவர், இந்த படத்தின் காப்பி மும்பையில் இருந்து வந்துள்ளது. அதனை தங்களால் மாற்ற இயலாது என தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து வீட்டிற்கு வந்த மாணவி இதுகுறித்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் தியேட்டரில் ஒளிபரப்பான விழிப்புணர்வு வாசகத்தில் உள்ள எழுத்துப்பிழையை சுட்டிக்காட்டியும், அதனை சரி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் கடிதம் எழுதி அனுப்பினார்.

இதுகுறித்து சிறுமியின் தந்தை பழனிச்சாமி கூறியதாவது:

கடந்த ஞாயிற்றுக்கிழமை படம் பார்க்கச் சென்றபோது, படம் துவங்கும் முன்புவந்தவிழிப்புணர்வு வாசகத்தில் எழுத்துப் பிழை இருப்பதை எனது மகள் பார்த்தார்.

அதனை என்னிடம் தெரிவித்த அவர், எழுத்து பிழையை சரிசெய்யாவிட்டால் அதனை பார்க்கும் அனைவரும் அதே எழுத்துப் பிழையுடன் எழுத வாய்ப்புள்ளது. அதனால் அதனை மாற்ற கோரி தமிழக முதலமைச்சருக்கு எனது மகளே கடிதம் எழுதி அனுப்பியுள்ளார். இது வரவேற்கத்தக்கது.

தமிழை ஊக்குவிக்க தமிழக முதலமைச்சர் பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். எழுத்து பிழையை உடனடியாக மாற்றுவார்கள். மேலும் தன்னுடைய மகள் கொரோனா காலத்திலும், மழைவெள்ளபாதிப்புகளுக்கும் தான் சேர்த்து வைத்திருந்த தொகையைத் தமிழக அரசுக்கு வழங்கியுள்ளார்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தென் மாவட்டங்களுக்கு 44 சிறப்பு ரெயில்கள் தென்னக ரெயில்வே அறிவிப்பு



சென்னை, அக்.11

நவராத்திரி மற்றும் தீபாவளி பண்டிகைகள் நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படும். இதற்காக ஆங்காங்கே பணிபுரிபவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்வார்கள். இதனால் ஏற்படும் நெரிசலை சமாளிக்க நாடு முழுவதும் இந்திய ரெயில்வே துறை சிறப்பு ரெயில்களை இயக்கும்.

கடந்த ஆண்டு 4,429 சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட்ட நிலையில் இந்த ஆண்டு 6,556 சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட உள்ளது.

இதில் தென்னக ரெயில்வே முதற்கட்டமாக 44 சிறப்பு ரெயில்களை அறிவித்துள்ளது.

இந்த ரெயில்கள் கொச்சுவேலி, சந்திரகாச்சி, ராமநாதபுரம், திருச்சி, கோவை, நெல்லை, ஈரோடு, நாகர்கோவில், மதுரை, கொல்லம், விசாகப்பட்டினம் உள்பட பல நகரங்களுக்கு இயக்கப்படுகிறது.

திருச்சி தாம்பரம் (06190) இடையே திங்கள், வியாழன் தவிர வாரத்தில் 5 நாட்கள் சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது.

தாம்பரம் கோவை (06184) இடையே வாராந்திர சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது.

இந்த ரெயில் வெள்ளிக்கிழமை தோறும் தாம்பரத்தில் இருந்தும், ஞாயிறு தோறும் கோவையில் இருந்தும் புறப்படும்.

இன்று இரவு சென்னை சென்ட்ரல் நாகர்கோவில் (06178) சிறப்பு ரெயில் புறப்படுகிறது.

இந்த சிறப்பு ரெயில்கள் அடுத்த மாதம் (நவம்பர்) 30ந்தேதி வரை இயக்கப்படும்.

## டி.ஐ.ஜி.யுடன் புஸ்சி ஆனந்த் சந்திப்பு: மாநாடு மாதிரி வரைபடத்தை அளிக்க அறிவுறுத்தல்



விழுப்புரம், அக். 11

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை ஆரம்பித்து உள்ளார். இதற்கான கொடி அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு வருகிற 27ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அடுத்துள்ள வி. சாலையில் நடைபெற உள்ளது. இதற்காக இடங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் மாநாடு பணிகள் விறு, விறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் நேற்று கட்சியின் உயர் மட்டக்குழு நிர்வாகிகள், மாநில பொது செயலாளர் புஸ்சி ஆனந்த் தலைமையில் மாநாடு பந்தல் அமைக்கும் பணியை பார்வையிட்டனர். பந்தல் அமைப்பாளர், பாதுகாவலர்கள், ஒளி, ஒலி அமைப்பாளர் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினர்.

மாநாட்டிற்கு வரும் தொண்டர்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

தமிழக வெற்றிக் கழக பொது செயலாளர் புஸ்சி ஆனந்த் விழுப்புரத்தில் டி.ஐ.ஜி. திஷாமித்தல், போலீஸ் சூப்பிரண்டு தீபக் சிவாச் ஆகியோரை சந்தித்தார்.

அப்போது மாநாட்டுக்கான ஏற்பாடுகள், பாதுகாப்பிற்காக காவல் துறையினர் குறிப்பிட்டிருந்த முக்கிய நிபந்தனைகள் பின்பற்றப்படுகிறதா, மாநாட்டிற்கான வரைபடம் போன்றவற்றை அளிக்குமாறு போலீஸ் அதிகாரிகள் தரப்பில் கேட்டுள்ளனர். பாதுகாப்பு விதிமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என டி.ஐ.ஜி. அறிவுறுத்தியதாக த.வெ.க.நிர்வாகிகள் தரப்பினர் தெரிவித்தனர்.

## காஷ்மீர் தேர்தலில் வெற்றிபெற்ற காங்கிரஸ் தேசிய மாநாட்டுக் கட்சி கூட்டணிக்கு மு.க.ஸ்டாலின் வாழ்த்து



சென்னை, அக். 11

காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் 90 தொகுதிகளுக்கும் 3 கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டு இருந்தது. ஒருங்கிணைந்த மாநிலமாக இருந்த காஷ்மீரை 2 யூனியன் பிரதேசங்களாக பிரித்த பின்னர் நடைபெற்ற முதல் தேர்தல் என்பதால், இதன் முடிவுகள் நாடு முழுவதும் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இங்கு பா.ஜ.க, காங்கிரஸ்-தேசிய மாநாடு கூட்டணி, மக்கள் ஜனநாயக கட்சி உள்ளிட்ட முக்கிய கட்சிகள் தீவிரமாக தேர்தலை எதிர்கொண்டன.

90 தொகுதிகளில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன. இதில் தொடக்கத்தில் இருந்தே காங்கிரஸ்-தேசிய மாநாடு கூட்டணி முன்னிலை வகித்து வந்தது. இறுதியில் இக்கூட்டணி 49 இடங்களை கைப்பற்றி அறுதி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறது. பாரதிய ஜனதா 29 இடங்களை கைப்பற்றி உள்ளது.

காஷ்மீர் தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் தேசிய மாநாடு கட்சியின் துணைத்தலைவர் உமர் அப்துல்லா புதிய முதல் மந்திரியாக பதவியேற்பார் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், காஷ்மீர் தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் தேசிய மாநாட்டுக் கட்சி கூட்டணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

காங்கிரஸ் கூட்டணிக்கு மாபெரும் வெற்றியை அளித்த ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு வாழ்த்துகள். வெற்றியை காட்டிலும் ஜனநாயகத்திற்கும், இந்தியாவிற்கும் முக்கியமானது. மத்திய பாஜக அரசு அநியாயமாக பறித்த ஜம்முகாஷ்மீரின் கண்ணியம் மற்றும் மாநில அந்தஸ்தை மீட்டெடுப்பதற்கான அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான ஆணை இது. இந்த தருணம் ஒவ்வொரு காஷ்மீரியின் நம்பிக்கையையும் மதிக்கும் நியாயமான மற்றும் உள்ளடக்கிய எதிர்காலத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது என்று கூறியுள்ளார்.

## தக்காளி விலை உயர்வு எதிரொலி... பண்ணை பசுமை கடைகளில் விற்பனை செய்ய அரசு ஏற்பாடு



சென்னை, அக். 11


தக்காளி விலை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த மாதம் (செப்டம்பர்) இறுதியில் ஒரு கிலோ ரூ.25 முதல் ரூ.30 வரை விற்கப்பட்ட தக்காளி, கடந்த சில நாட்களில் கிலோவுக்கு ரூ.50 முதல் ரூ.70 வரை அதிகரித்து விற்பனையானது.

இந்நிலையில், இன்று சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ தக்காளி ரூ.60 முதல் ரூ.90 வரை விற்பனையாகிறது. மொத்த மார்க்கெட்டில் இந்த விலை என்றால், வெளி மார்க்கெட் மற்றும் சில்லறை கடைகளில் ரூ.70 முதல் ரூ.100 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதே போல் வெங்காயம் விலையும் உயர்ந்துள்ளது. தற்போது ஆந்திரா, கர்நாடகாவில் மழை காரணமாக தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டு, அதன் வரத்து வெகுவாக குறைந்திருப்பதாக சொல்லப்படுகிறது. மேலும் வரும் நாட்களில் தக்காளி விலை மேலும் உயர வாய்ப்பு இருப்பதாக வியாபாரிகள் கருத்துதெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், வெங்காயம், தக்காளி விலை உயர்ந்துள்ள நிலையில், அவற்றை மகாராஷ்டிராவில் இருந்து இறக்குமதி செய்து பண்ணை பசுமை கடைகளில் தமிழ்நாடு அரசு விற்பனை செய்கிறது.

கடைகளில் வெங்காயம் கிலோ ரூ.55 வரை, தக்காளி ரூ.60 வரை விற்பனையாகும் நிலையில், இங்கு வெங்காயம் கிலோ ரூ.40க்கும்,தக்காளிகிலோ ரூ.60க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ஒருவருக்குஅதிகபட்சம்2கிலோ மட்டுமே வழங்கப்படும் என தகவல் வெளியாகி உள்ளது.

## பொது இடங்களில் குப்பை கொட்டும் நபர்களுக்கு டிஜிட்டல் கருவி மூலம் அபராதம்: மாநகராட்சி நடவடிக்கை




சென்னை, அக். 11

சென்னை மாநகராட்சி பகுதிகளில் நாள்தோறும் 7 ஆயிரம் டன் வரையிலான குப்பைகள் அகற்றப்படுகிறது.

இதில், பொது இடங்கள் மற்றும் தனியார் இடங்களில் விதிகளை மீறி கட்டிட கழிவுகள் மற்றும் குப்பை கொட்டுவதை தடுக்கும் வகையில் அபராதத் தொகை ரூ.500ல் இருந்து ரூ.5 ஆயிரமாக மாநகராட்சி உயர்த்தியது.

கடந்த 10 நாட்களில் மட்டும் பொது இடங்களில் விதிகளை மீறி குப்பை கொட்டிய நபர்களுக்கு ரூ.2½ லட்சம் வரையில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அபராதத் தொகை விதிக்கும் நடைமுறையை டிஜிட்டல் மயமாக்க மாநகராட்சி திட்டமிட்டது. அதன்படி, போக்குவரத்து போலீசார் அபராதம் விதிக்க பயன்படுத்தும் கருவி போல் டிஜிட்டல் கருவியை மாநகராட்சி சோதனை முறையில் பயன்படுத்தி வருகிறது.

முதல்கட்டமாக 500 கருவிகளை மாநகராட்சி கொள்முதல் செய்துள்ளது. இந்த கருவிகள் 15 மண்டலங்களில் வழங்கும் பணி ஓரிரு நாட்களில் தொடங்கப்பட உள்ளது.

டிஜிட்டல் முறையில் அபராதம் விதிக்கும் நடைமுறை விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ரூட் தல விவகாரம்... படுகாயமடைந்த மாணவர் உயிரிழப்பு



சென்னை, அக். 11

சென்னையில் ரூட் தல விவகாரத்தில் கல்லூரி மாணவர்கள் மோதிக் கொள்வது வாடிக்கையாகி வருகிறது. பேருந்து மற்றும் ரெயிலில் பயணிக்கும் போது கல்லூரி மாணவர்களிடையே ரூட் தல தொடர்பாக மோதல்கள் அதிகரித்து வரும் நிலையில் கல்லூரி மாணவர் ஒருவர் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் ரூட் தல தொடர்பாக மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறில் மாநில கல்லூரி மாணவர் சுந்தர் மீது பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் தாக்குதல் நடத்தினர். இதில் கொடூரமாக தாக்கப்பட்ட சுந்தர் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனை தொடர்ந்து பச்சையப்பன், மாநிலக் கல்லூரிகளில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் ரெயில், பஸ் வழித்தடங்களிலும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மோதல் தொடர்பாக பச்சையப்பன் கல்லூரியை சேர்ந்த 5 பேரை போலீசார் ஏற்கனவே கைது செய்திருந்தனர். இதற்கிடையே, சுந்தர் தாக்கப்பட்ட வழக்கு கொலை வழக்காக மாற்றப்பட்டுள்ளது.

## சேலம், குன்னூரில் விடிய விடிய கனமழை: பள்ளிகளில் வெள்ள நீர் புகுந்து பொதுமக்கள் அவதி



ஊட்டி, அக். 11

மேற்குதொடர்ச்சி மலையில் அமைந்துள்ள நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும்மேமாதம் இறுதியில் தொடங்கும் தென்மேற்கு பருவமழை செப்டம்பர் மாதம் வரை பெய்யும்.

அதேபோல் அக்டோபர் மாதம் தொடங்கும் வடகிழக்கு பருவமழை டிசம்பர் மாதம் வரை கொட்டும். குன்னூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக மேகமூட்டத்துடன் கூடிய இதமான காலநிலை நிலவியது. மேலும் அவ்வப் போது சாரல் மழை பெய்து வந்தது.

காலைமுதலே வானம் மப்பும், மந்தாரமுமாக காணப்பட்டது. தொடர்ந்து மதியம் தொடங்கிய கனமழை விடிய விடிய பெய்தது.

அதிலும் குறிப்பாக குன்னூர், வெலிங்டன், அருவங்காடு, எல்லநல்லி, சேலாஸ், குன்னக்கம்பை, தூதூர் மட்டம், கொலக்கம்பை, எடப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் பரவலான மழை வெளுத்து வாங்கியது.

குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் உள்ள பர்லியார் பகுதியில் நேற்று பெய்த கனமழையால் அங்குள்ள கடைகளுக்குள் மழைநீர் புகுந்தது. இதனால் வியாபாரிகள் பெரும் அவதிக்கு உள்ளாகினர்.

பர்லியார்அரசுதொடக்கப்பள்ளியில் 100க்கும் மேற்பட்ட பழங்குடி மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்த நிலையில் கனமழை காரணமாகதாழ்வான பகுதியில் தேங்கிய மழைநீர் பள்ளிக்குள் புகுந்தது.

இதனால் அங்குள்ள வகுப்பறைகளில் முட்டளவு தண்ணீர் தேங்கி நின்றது. மேலும் பள்ளி வளாகம் முழுவதும் தற்போது சேறும், சகதியுமாக காட்சியளிக்கிறது. இதுகுறித்து பள்ளி நிர்வாகம் உடனடியாக வருவாய் மற்றும் கல்வித்துறை அதிகாரிகளுக்கு தகவல் அளித்தது. தொடர்ந்து பள்ளி வளாகம் மற்றும் வகுப்பறைகளில் தேங்கிய வெள்ள நீரை வெளியேற்றும் பணிகளில் பள்ளி ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

சேலம் மாவட்டம் முழுவதும் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மாலை மற்றும் இரவு நேரங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.

அதேபோல நேற்றும் சேலம் மாநகரம், ஏற்காடு, வாழப்பாடி, ஆத்தூர், கெங்கவல்லி, கரியகோவில், ஓமலூர் உள்பட பல்வேறு இடங்களில் மழை பெய்தது.

சேலத்தில் பெய்த மழையின்காரணமாகதாழ்வான பகுதிகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் பள்ளங்களில் தண்ணீர் குட்டை போல் தேங்கி நின்றது.

சேலம் மாவட்டத்தில் மாலை, மற்றும் இரவு நேரங்களில் பலத்த மழை பெய்தாலும் பகல் நேரங்களில் வெயில் சுட்டெரிக்கிறது. இதனால் பகலில் புழுக்கமும் அதிகளவில் இருக்கிறது. இந்த நிலையில் தொடர் மழை காரணமாக இரவு நேரங்களில் கடுங்குளிர் நிலவி வருகிறது. சுற்றுலா தலமான ஏற்காட்டில் நேற்று 6 மி.மீட்டர் அளவு மழை பெய்தது. ஆனாலும் நேற்று மாலை முதல் கடுங்குளிர் நிலவியது. குறிப்பாக இரவில் குளிர்ந்த காற்று வீசியதால் பொது மக்கள் கடுமையாக அவதியடைந்தனர். காலை நேரத்தில் பொதுமக்கள் கம்பளி ஆடைகளை அணிந்து வந்து சென்றனர்.


இதே போல் அயோத்தியாப்பட்டணம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இன்று காலை கடுமையான பனிமூட்டம் நிலவியது. இரவில் மழை பெய்த நிலையில் காலையில் குளிருடன், பனிமூட்டமும் நிலவியதால் பொதுமக்கள் அவதியடைந்தனர். பகலில் வெயில், மாலை, இரவில் மழையுடன் குளிர், காலை நேரத்தில் பனிப்பொழிவு என மாறி மாறி நிலவிவரும் சீதோஷ்ண நிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லிமீட்டரில் வருமாறு:

சேலம்26, ஏற்காடு6, வாழப்பாடி28.2, ஆணைமடுவு23, ஆத்தூர்5.2, கெங்கவல்லி15, தம்மம்பட்டி12, ஏத்தாப்பூர்3, கரியகோவில் 45, வீரகனூர்10, சங்ககிரி1.4, ஓமலூர்8, டேனிஷ்பேட்டை6.5 என மாவட்டம் முழுவதும் 189.7 மில்லிமீட்டர்மழை பெய்தது.

# டிஜிட்டல் சவுத் டிரஸ்ட் நலத்திட்ட முகாம் திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்றது

திருவள்ளூர், அக். 11
டிஜிட்டல் சவுத் டிரஸ்ட் நலத்திட்ட முகாம் திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்றது.
தமிழ்நாடு மாநிலத் தலைவர் எஸ்.ஜி. கேசவ் மற்றும் தலைமை செயல் அதிகாரி எஸ். ஸ்ரீனிவாசன் தலைமையில் செயல்பட்டு வரும் டிஜிட்டல் சவுத் டிரஸ்ட், சென்னை, காஞ்சிபுரம், வேலூர், கோவை, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் நலத்திட்ட உதவிகளை மேற்கொண்டு வருகிறது.




இதன் தொடர்ச்சியாக, திருவள்ளூர் மாவட்டத் தலைவர் குமரேசன் தலைமையில் கண் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் ஏழை மற்றும் எளியவர்களுக்கு இலவச கண் சிகிச்சை அளிக்கப்பட்டதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு டிஜிட்டல் சவுத் டிரஸ்ட் மூலமாக கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.
நிகழ்ச்சியில் டிஜிட்டல் சவுத் டிரஸ்ட் உறுப்பினர்களான பிரபாகரன், கே. சதீஷ்குமார், லாகக்குமார் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# திருக்கோவிலூரில் காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற எழுச்சிப் பேரணி

விழுப்புரம், அக். 11
விழுப்புரம் மத்திய மாவட்டம் திருக்கோவிலூர் நகர காங்கிரஸ் சார்பில் M.P.கதிர்வேல் தலைமையில் மகாத்மா காந்தியின் 155 வது பிறந்த நாளை முன்னிட்டு நமது இந்தியா நமக்கான இந்தியா எழுச்சி பேரணி நடைபெற்றது.
R.T.சீனிவாசகுமார் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு நான்கு முனை சந்திப்பில் சந்திப்பில் உள்ள காந்தி மற்றும் காமராஜர் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்



பின்னர் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை வரவேற்றார்.
பின்னர் நான்கு முனை சந்திப்பில் இருந்து ஐந்து முனை சந்திப்பு வரை எழுச்சிப் பேரணி நடைபெற்றது.மேலும் அங்கே இருந்த காந்தி உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.
இதில் அனைத்து காங்கிரஸ் கமிட்டி மாநில உறுப்பினர் ராம்மூர்த்தி, மாவட்ட பொருளாளர் ராதாகிருஷ்ணன், ராஜ்குமார், செல்வராஜ்,பழனி மகிளாகாங்கிரஸ்மாவட்ட தலைவி லதா பீட்டர், ராஜேஸ்வரி, ஸ்ரீராம், பிரபாகரன், புஷ்பராஜ், பாரி பாபு, சந்தான குமார் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# விழுப்புரம் மாவட்டத்தில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் பிறந்த நாளை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம்

விழுப்புரம், அக். 11
விழுப்புரம் மாவட்டத்தில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் பிறந்த நாளை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது



தமிழக முழுவதும் இன்று பாமக கட்சி சார்பில் பாமக தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் 56வது பிறந்தநாள் விழா விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகின்றன. அதில் ஒரு பகுதியாக விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் வட்டம் வடகரை தாழனூர் என்ற கிராமத்தில் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ முகாம் மாவட்ட செயலாளர் பால சக்தி தலைமையில் நடைபெற்றது.
இதில் பாமக தலைமை நிலை செயலாளர் அன்பழகன் கலந்து கொண்டு மருத்துவ முகாமை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் தங்கஜோதி முன்னிலை வகித்தார். உடன் பாமக தொண்டர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.
இந்த மருத்துவ முகாமில் ஏழை எளிய மக்கள் கலந்து கொண்டு தங்கள் உடலை பரிசோதித்து சென்றனர் மேலும் கண்,காது,ரத்த அழுத்தம் ,சர்க்கரை நோய் உள்ளிட்ட நோய்களுக்கு பரிசோதனை செய்து வீடு திரும்பினர்.
இதில் தலைசிறந்த சிறந்த மருத்துவர்கள் பல்வேறு மருத்துவமனையில் இருந்து கலந்துகொண்டு பொதுமக்களுக்கு பரிசோதனை செய்து சிகிச்சை அளித்தனர்.




திருப்புவனம் வட்டாரத்தில் சராசரியாக ஆண்டிற்கு 92 ஏக்கர் சிறிய வெங்காயம் பயிரிடப்படுகிறது முக்கியமாக செங்குளம் பறையங்குளம் முக்குடி காஞ்சிரங்குளம் உள்ளிட்ட கிராமங்களில் 2023- 2024 வருடங்களில் அதிக அளவு நோய் தாக்குதல் போதிய விலை கிடைக்கவில்லை காட்டுப் பன்றிகள் மற்றும் நோய் தாக்குதல் உள்ளிட்ட காரணங்களால் சாகுபடி குறைந்துள்ளது நடைபாண்டுசிறியவெங்காயசாகுபடியைவிவசாயிகளிடம்ஊக்குவிப்பதற்காக சமுதாயக்கூடத்தில் கூட்டம் திருபுவனம் வட்டார வளர்ச்சி அலுவலர்களால் நடத்தப்பட்டது. சிறிய வெங்காயம் விலை சாகுபடி தொழில்நுட்பம் சந்தை சார்ந்த நீர் மேலாண்மை தோட்டக்கலை துறையில் வழங்கப்படும் மானிய திட்டங்கள் பூச்சி நோய் தாக்குதலுக்கு ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் காப்பீடு மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது இந்தத் திட்டத்தில் தோட்டக்கலை உதவி இயக்குனர் கா சர்மிளா தோட்டக்கலை அலுவலர் மாளவிகா உதவி தோட்டக்கலை அலுவலர் கார்த்திக் வெங்காய சாகுபடி முன்னோடி விவசாயிகள் தன்னார்வ விவசாயிகள் கலந்து கொண்டனர்

# உலக மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி: விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி & இந்திய மருத்துவ சங்கம். இணைந்து உலக மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி

விழுப்புரம், அக். 11
விழுப்புரத்தில் உலக மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி & இந்திய மருத்துவ சங்கம். இணைந்து உலக மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி 10.10.2024 காலை விழுப்புரம் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் இருந்து துவங்கி நடைபெற்றது. பேரணியை மருத்துவக் கல்லூரி முதல்வர்.திருமதி




ரமாதேவி துவக்கிவைத்தார். மருத்துவ சங்க நிர்வாகிகள் டாக்டர்.செல்வராஜ். K.திருமாவளவன். ஆறுமுகம். மற்றும் நிர்வாகிகள். மருத்துவர்கள், ஜூனியர் ரெட் கிராஸ் மாவட்ட கன்வீனர் முனைவர். ம. பாபு செல்வதுரை ஆகியோர் முன்னிலையில் 500 க்கும் மேற்பட்ட மருத்துவ, செவிலியக் கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். இதில் தாய்ப்பால் கொடுப்போம், புற்றுநோயை தடுப்போம் போன்ற விழிப்புணர்வு பதாகைகளுடன் பேரணியில் பங்கேற்றனர். பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

# 2025ம் ஆண்டுக்கான டிஎன்பிஎஸ்சி தேர்வு அட்டவணை வெளியானது

சென்னை, அக்.11
அரசுதுறைகளில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான காலி பணியிடங்களைநிரப்புவதற்கான போட்டித் தேர்வுகளை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்(டிஎன்பிஎஸ்சி)நடத்தி வருகிறது. குரூப் 1, குரூப் 2, 2ஏ, குரூப் 4 என பல் வேறு நிலைகளில் உள்ள பணியிடங்கள் அவ்வப்போது அறிவிப்பு வெளியிடப்பட்டு நிரப்பப்படுகின்றன. இதற்கான ஆண்டு தேர்வு கால அட்டவணையை டி.என்.பி.எஸ்.சி ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் வெளியிட்டு வருகிறது.
இந்தநிலையில், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்கான அட்டவணை வெளியாகி உள்ளது. அதன் விபரம் பின்வருமாறு;
★ குரூப் 1 தேர்வு குறித்த அறிவிப்பு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியாகும் என்றும், தேர்வு அடுத்த ஆண்டு ஜூன் 15ஆம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
★ குரூப் 2 மற்றும் குரூப் 2ஏ தேர்வு குறித்த அறிவிப்பு ஜூலை 15ம் தேதி வெளியாகும் எனவும், தேர்வு அடுத்த ஆண்டு செப்டம்பர் 28ம் தேதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
★ குரூப் 4 தேர்வு குறித்த அறிவிப்பு அடுத்த ஆண்டு ஏப்ரல் 25ம் தேதி வெளியாகும் எனவும், தேர்வு ஜூலை 13ம் தேதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிக்பாஸ் நிகழ்ச்சியில் கழுதை இடம்பெறுவதை தவிர்க்கவும்: சல்மான் கானுக்கு பீட்டா வலியுறுத்தல்



நடிகர் சல்மான்கான் தொகுத்து வழங்கும் இந்தி பிக்பாஸ் சீசன் 18 நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று தொடங்கியது. 2006ம் ஆண்டு தொடங்கிய இந்தி பிக்பாஸ் சீசன் 1 தற்போது 18வது சீசன் நடைபெற்று வருகிறது. இதில் தமிழ் நடிகையான ஸ்ருதிகா பங்கேற்றுள்ளார்.
இதையடுத்து, ஹவுஸ்மேட்களுக்கு ஒரு டாஸ்க் வழங்கப்பட்டுள்ளது. அதாவது காதராஜ் என்ற புனைபெயர்கொண்ட ஒருகழுதையைஹவுஸ்மேட்கள் பராமரிக்க வேண்டும். இதற்காக கழுத்தைக்கு அங்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான ப்ரோமோ வெளியான நிலையில், சல்மான் கான் மற்றும் பிக் பாஸ் தயாரிப்பாளர்களுக்கு பீட்டா இந்தியா கடிதம் எழுதியுள்ளது. அக்கடிதத்தில் விலங்குகளை பொழுதுபோக்குக்காக பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். இது விலங்குகளுக்கு மன அழுத்தம் மற்றும் பார்வையாளர்களுக்கு மன உளைச்சல்ஏற்படுவதுமட்டுமல்லாமல், ஒருமுன்னுதாரணம்ஆகிவிடும். ஆகையால்கழுதையைஒப்படைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

# இந்த சூழ்நிலையை பார்க்க விரும்பினேன் வெற்றிக்கு பங்காற்றிய மிடில் ஆர்டர் குறித்து சூர்யகுமார் கருத்து




வங்கதேசத்துக்கு எதிராக நடைபெற்ற 2வது டி20 கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட்டிங் செய்த இந்தியா 221 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக நித்திஷ் ரெட்டி 74, ரிங்கு சிங் 53 ரன்கள் எடுத்தனர். பின்னர் விளையாடிய வங்கதேசம் 20 ஓவரில் 135 ரன்கள் மட்டுமே எடுத்து தோல்வியை சந்தித்தது. அதிகபட்சமாக முகமதுல்லா 41 ரன்கள் எடுத்தார். இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரை இந்தியா 2 0 (3) என்ற கணக்கில் வென்றுள்ளது.
41-3 என தடுமாறும் போது மிடில் ஆர்டர் எப்படி செயல்படுகிறது என்பதை பார்க்க விரும்பினேன் என இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது: இது போன்ற சூழ்நிலையை நான் பார்க்க விரும்பினேன். 413 என தடுமாறும் போது மிடில் ஆர்டர் எப்படி செயல்படுகிறது என்பதை பார்க்க விரும்பினேன். ஐபிஎல் அணிக்காகவும் வலைப்பயிற்சியிலும் என்ன செய்கிறீர்களோ அதை இந்திய அணிக்காக செய்யுங்கள் என்று வீரர்களிடம் கூறியுள்ளேன். ஜெர்ஸி மட்டுமே மாறும். மற்ற அனைத்தும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று அவர்களிடம் கூறியுள்ளேன். சில நேரங்களில் ஹர்திக் பாண்டியா, வாஷிங்டன் சுந்தரால் பந்து வீச முடியாது. அதனால் 170 175 ரன்களை கட்டுப்படுத்தும் போது பவுலர்களால் என்ன செய்ய முடியும் என்பதை பார்க்க விரும்பினேன். எனவே ஹர்திக் பாண்டியா இல்லாமல் அதிகமான பவுலர்களை பயன்படுத்தினேன். இது நித்திஷ் ரெட்டியின் நாள். எனவே அவருக்கும் வாய்ப்பு கொடுக்க விரும்பினேன். என்று சூர்யகுமார் கூறினார்.

# நடிகையை கர்ப்பமாக்கி சீரழித்தார் பிரபல இயக்குனர் மீது பூனம் கவுர் புகார்



ஹேமா கமிஷன் அறிக்கை மலையாள திரையுலகில் நடந்த பாலியல் அத்து மீறல்களை அம்பலப்படுத்தி உள்ள நிலையில் நடிகைகள் பலர் தங்களுக்கு நேர்ந்த பாலியல் தொல்லை அனுபவங்களை பகிர்ந்து வருகிறார்கள். இந்த நிலையில் தமிழில் நெஞ்சிருக்கும் வரை, பயணம், வெடி, என் வழி தனிவழி, நாயகி உள்ளிட்ட படங்களிலும், தெலுங்கு படங்களிலும் நடித்துள்ள பூனம் கவுர் தற்போது சமூக வலைத்தளத்தில் அதிர்ச்சி தகவலை பகிர்ந்துள்ளார் பூனம் கவுர் வெளியிட்டுள்ள பதிவில், "தெலுங்கு இயக்குனர் ஒரு நடிகையை கர்ப்பமாக்கி அந்த பெண்ணின் சினிமா வாழ்க்கையை நாசம் செய்தார்.
சினிமா துறையில் பிரபலமாக இருக்கும் அந்த இயக்குனர் செய்த கொடூரமான இந்த விஷயத்தில் தெலுங்கு நடிகர் சங்கம் தலையிட்டு பாதிக்கப்பட்ட அந்த பஞ்சாபி நடிகைக்கு கொஞ்சம் உதவி செய்தது" என்று குறிப்பிட்டு உள்ளார். இயக்குனர் பெயரை அவர் தெரிவிக்கவில்லை. இது பரபரப்பாகி உள்ளது.
சமீபத்தில் நடிகர் பவன் கல்யாண், தெலுங்கு இயக்குனர் திரி விக்ரம் ஆகியோர் மீதும் பூனம் கவுர் குற்றச்சாட்டுகள் தெரிவித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இளம் வயதில் அரை சதம் ஜெய்ஸ்வால் சாதனையை முறியடித்த நிதிஷ் ரெட்டி




இந்தியா வங்கதேசம் அணிகள் மோதிய 2வது டி20 கிரிக்கெட் போட்டி டெல்லியில் நேற்று நடைபெற்றது. இதில் முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 221 ரன்கள் குவித்தது. இதனையடுத்து களமிறங்கிய வங்கதேச அணி 135 ரன்கள் மட்டுமே எடுத்து தோல்வியை தழுவியது.
இந்த போட்டியில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய நிதிஷ் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார். அவர் 34 பந்தில் 74 ரன்கள் குவித்து அசத்தினார். இதன் வாயிலாக சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இளம் வயதில் அரை சதமடித்த இந்திய வீரர் என்ற ஜெய்ஸ்வால் (21 வருடம் 227 நாட்கள்) சாதனையையும் நிதிஷ் ரெட்டி (21 வருடம் 136 நாட்கள்) முறியடித்துள்ளார்.
இந்த பட்டியலில் முதல் 3 இடங்களில் ரோகித் சர்மா (20 வருடம் 143 நாட்கள்), திலக் வர்மா (20 வருடம் 271 நாட்கள்), ரிஷப் பண்ட் (21 வருடம் 38 நாட்கள்) உள்ளனர்.

# திரில்லர் வெப் சீரிஸ் தயாரித்துள்ள கார்த்திக் சுப்பராஜ் ரிலீஸ் எப்போ தெரியுமா?




இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ் தயாரித்துள்ள புதிய இணைய தொடர் ஸ்னேக்ஸ் அண்டு லேடர்ஸ். பரத் முரளிதரன், அசோக் வீரப்பன், கமலா அல்கிமிஸ் இயக்கத்தில் உருவாகி இருக்கும் இந்த இணைய தொடர் அமேசான் பிரைம் ஓ.டி.டி. தளத்தில் வருகிற 18 ஆம் தேதி வெளியாக உள்ளது.
இந்த நிலையில், ஸ்னேக் அண்டு லேடர்ஸ் இணைய தொடரின் டிரைலர் தற்போது வெளியாகி உள்ளது. பள்ளி மாணவர்கள் நான்கு பேரின் சாகச பயணத்தில் நடைபெறும் விபரீதம், அதன் பின்னணியில் உள்ள மனிதர்கள் மற்றும் அதன் பின் நடைபெறும் பிரச்சினைகள் இந்த இணைய தொடரின் கதை ஆகும்.
திரில்லர் ஜானரில் உருவாகி இருக்கும் ஸ்னேக் அண்டு லேடர்ஸ் இணைய தொடரை கமல் அல்கெமிஸ் மற்றும் திவாகர் கமல் இணைந்து உருவாக்கியுள்ளனர்.

# டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக சதம்: கவாஸ்கர், லாரா சாதனையை முறியடித்த ஜோ ரூட்

பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி முல்தானில் நடந்து வருகிறது. டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் முதல் இன்னிங்சில் 149 ஓவரில் 556 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. பாகிஸ்தான் தரப்பில் ஷபீக் 102 ரன், ஷான் மசூத் 151 ரன், ஆகா சல்மான் 104 ரன்கள் எடுத்தனர்.
தொடர்ந்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து மூன்றாம் நாள் முடிவில் 3 விக்கெட்டுக்கு 492 ரன்கள் குவித்துள்ளது. ஜோ ரூட் 172 ரன்னும், ஹாரி புரூக் 141 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர்.
இந்நிலையில், இங்கிலாந்தின் ஜோ ரூட் சிறப்பாக விளையாடி 167 பந்துகளில் சதம் விளாசினார். இதில் 7 பவுண்டரிகள் அடங்கும். இதன்மூலம் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் ஜோ ரூட் 35 வது சதத்தை விளாசி அசத்தியுள்ளார். இதையடுத்து, சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக சதம் அடித்தவர்கள் பட்டியலில் இந்திய வீரர் சுனில் கவாஸ்கர், வெஸ்ட் இண்டீஸ் வீரர் பிரையன் லாரா, பாகிஸ்தான் வீரர் யூனிஸ் கான், இலங்கை வீரர் ஜெயவர்த்தனே ஆகியோரை பின்னுக்குத் தள்ளி ஜோ ரூட் தற்போது 6வது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இந்தப் பட்டியலில் சச்சின் (51), முதலிடத்திலும், காலிஸ் (45) 2வது இடத்திலும், ரிக்கி பாண்டிங் (41) மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.